திரு. கே. உச்சி : துணைத் தலைவர் அவர்களே, இந்த மருந்தகம், கடந்த மழை காலத்திலே ஏற்பட்ட புயலால் போதுமான கட்டட வசதிகள் இல்லாத நிலையில் இருக்கின்றது. மக்களுக்கு, கடைக்கோடியிலே உள்ள மக்களுக்கு அடிக்கடி மருந்துகள் இல்லை என்று சொல்லப்படுகிற நிலைமை இருக்கிறது, ஆகவே அதைப் போக்குவதற்கான நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன்: துணைத தலைவா அவர்களே, இப்போது அந்த மருத்துவ மனை அரசால் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகவே மருந்து இல்லை என்ற சொல் வராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து அந்த மருத்துவ மனைக்கு கட்டட வசதிகள் சரியாக இல்லை என்று மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த அரசு கிராமப்பகுதிகளிலே, மலைப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கு நல்ல மருத்துவ வசதிகளைக் கிடைக்கச் செய்வதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. அந்த வகையில் அந்த மருத்துவ மனையைப் புதுப்பிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

(6) அரசினர் சட்ட முன்வடிவு

வன (திருத்த) சட்டமுன்வடிவு, 1979.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1979ஆம் ஆண்டு வன (திருத்தச்) சட்ட முன் வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இச் சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.